# நீங்கள் உங்கள் நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்று எப்படி நிச்சயமாக சொல்கிறீர்கள்? நிகழ்ச்சி -3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில், எப்போதும் கேட்கப்படும் முக்கியமான மதம் சார்ந்த கேள்வி: "உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயம் இருக்கிறதா?"

**டாக்டர். எர்வின் லட்சர்:** நீங்கள் மரித்த அடுத்த விநாடியில் நீங்கள் ஒருவேளை அழகான சூழலை, கிறிஸ்துவின் மகிமையை பரலோகத்தை காண்பீர்கள். அல்லது நீங்கள் இன்று கற்பனை செய்து பார்க்க முடியாத பயங்கரமான சூழலை காண நேரிடும். அதை குறித்து யோசிப்பதை நிறுத்திவிட்டாலும், நமக்குள் எழும்பும் முக்கிய கேள்வி இதுதான், "என்னுடைய நித்தியத்தை எங்கே செலவிடப்போகிறேன்?"

**அறிவிப்பாளர்:** இந்த கேள்விக்கு பதிலளிக்க இருப்பவர், ஜானுடைய இன்றைய விருந்தினர் டாக்டர். எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் தலைமை போதகர் சிக்காகோ, இலினாசிஸ்.

அவர் மேலும் சில கேள்விகளுக்கும் பதிலளித்திடுவார்:

ஆதியில் தேவனோடு உறவு வைத்து விசுவாசிகளாக இருந்து பின்னர் தங்கள் வாழ்வில் விசுவாசித்திலிருந்து பின்வாங்கியவர்களைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது?

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடாமல் மரிக்கும்போது தேவனுக்கு அவனுக்காக செய்த செயல்களை அவை ரத்து செய்திடுமா?

நாம் இன்றைக்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நாளை இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றென்றைக்கும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயம் அடைவது எப்படி?

இந்த பிரத்தியேக நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம் இது ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவோம் என்ற நிச்சயத்தை எப்படி அடையலாம் என்பதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். இது அருமையான தலைப்பு தானே? நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிற முக்கியமானவற்றில் இதுவும் ஒன்றுதானே? சுரி, இந்த கேள்விக்கு பல கோணங்கள் இருக்கிறது இன்றைக்கு அவற்றில் ஒன்றை நாம் பார்க்க இருக்கிறோம். ஜனங்களிடத்தில் நாம் கேட்பதுண்டு, “நீங்க பரலோகம்

போகப்போறீர்களா? அவர்கள், பெரும்பாலான நேரத்தில், சொல்லும் பதில், "ஆமாம்" அல்லது "போவேன் என நம்புகிறேன்." ஒருவேளை நீங்க அவங்ககிட்ட அடுத்த கேள்விய கேட்டா, "ஒருவர் பரலோகத்திற்கு செல்ல எப்படி நடந்துகொள்ளவேண்டும்? என்றால் சுவாரஸ்யமான பதில்கள் வந்திடும். அதாவது, எர்வின், உங்களுடைய ஊழியர்களில் ஒருவர் எங்களுடைய கிறிஸ்தவ புத்தக விற்பனை குழுமத்தின் கூட்டத்தில் பங்குகொண்டு சுவாரஸ்யமான பதில்களை கண்டறிந்திருக்கின்றனர். அதை பற்றி சொல்லுங்க.

**லட்சர்:** வெல், அவர் என்ன செய்தாருன்னா, ஒவ்வொரு கடைகளாக ஏறி இறங்கினார். இப்ப, இந்த புத்தகங்களை எல்லா எழுதியர்கள் இறையியல் வல்லுநர்கள் மீதமிருக்கும் நாம் அதை வாசிக்க வேண்டியவர்கள். அவர் ஒரு கேள்வியை கேட்டிருக்கிறார், " பரலோகத்திற்கு போக நீங்க எப்படிபட்டவராக இருக்கவேண்டும்?" அதற்கான பதில்கள் ஆச்சரியமளித்தன. அநேகருடைய பதில் என்னன்னா, "நா, அவ்வளவு நல்லவனல்ல அல்லது என்னால போக முடியாது என்பது." மற்றவர்களுடைய பதில், "வெல், கிறிஸ்தவர்கள் பூரணப்பட்டவர்களல்ல. அவர்கள் மன்னிக்கப்படுகிறார்கள்." பத்து அல்லது பன்னிரண்டு பேர்களில், ஒருவர் தான் வேதாகம ஈதியான பதிலளித்தனர், குறிப்பாக, அதற்கு தேவனைப்போல பூரணப்படவேண்டும் என்றனர், உண்மைதானே.

சரி, ஜான், இன்றைக்கு கேட்டுக்கொண்டிருப்பவர்களில் சிலர் பிராடஸ்டான்டாக இருக்கலாம், சில கத்தோலிக்கர்கள் இருக்கலாம். ஆனால் பிரோடஸ்டான்காரர்களும் கத்தோலிக்கர்களும் ஒன்றை ஏற்றுக்கொள்கிறார்கள், பல காரியங்கள் உள்ளது, ஆனால் எல்லாரும் ஒன்றை ஏற்றுக்கொள்கின்றனர், நீங்கள் பரலோகம் செல்ல தேவனைப் போல பூரணமுள்ளவராயிருக்க வேண்டும். நீதிநிறைந்த தேவன் அவரைப் போல பூரணப்படாமல் பாவியாக இருக்கும் ஒருவனை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அதுல உண்மை இருக்கு. அது லாஜிக்கலா மட்டும் இல்லாம, வேதாகம வழியாக இருக்கு.

**ஆன்கர்பெர்க்:** பிரச்சனை இதுதான், நீங்க ஒருவேளை அதை யோசித்து பார்த்து உங்களையே கேட்டுப்பாருங்க, "நா பூரணப்பட்டிருக்கேனா?"

**லட்சர்:** சரி, இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருப்பவர்கள் இதை நிறுத்த ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்கள், "இது தவறானதாக இருக்கு! ஏன்னா யார் தான் பூரணமான மனுஷனாயிருப்பான், யார் தா நல்லவன்?" நான் சொல்கிறேன் ஒருவேளை இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருப்பவர்களில் ஒருவர் தன்னை பூரணமான புருஷனாக நினைத்தால் அவருடைய மனைவியிடம் விசாரிக்க வேண்டும் அப்ப அவங்க அவரிடம் இருக்கும் காரியங்களை சொல்லி எவ்வளவு பெரிய ஆபத்தில் இருக்கிறார்

என்பதை தெளிபடுத்துவார்கள். நாம் எல்லாருமே பெரிய ஆபத்தில் இருக்கிறோம் ஏனெனில் பரிபூரணத்தை விட்டு விலகியிருக்கிறோம்.

இந்த விஷயத்தில் போராடிக்கொண்டிருந்த ஒருவருடைய கதையை சொல்கிறேன், அவருடைய பெயர் மார்டின் லூதர். இப்ப, சிலர் கேட்க மறுத்திடலாம் ஏனென்றால் அவர்கள், “அவர், மார்டின் லூதர் கத்தோலிக்கரல்ல என்றிடுவர்.” லூதரைப் பற்றிய மக்களின் கருத்தை கவனிப்பதை விட, அவர்கள் இந்த காரியத்தை கேட்க வேண்டும். இங்கு ஒருவர் தன்னுடைய ஆத்துமாவை இரட்சிக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு எர்பூர்டிலுள்ள ஒரு ஆசிரமத்தில் தன்னை இணைத்துக்கொள்கிறார். அவர் செய்ய விரும்பியது என்ன - மத்தியகால இறையியல் பரலோகம் செல்ல நாம் பூரணராக இருக்க வேண்டும் என்று போதித்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் சபைவயின் அனைத்து ஒழுங்குகளுக்கு கீழ்ப்படிந்தார். மாம்சத்தை ஒடுக்கும்படி எந்தவித கம்பளங்களும் இல்லாமல் கரகரப்பான தரையில் படுத்தார். பிச்சையெடுத்தார். தரித்திரத்தை ஏற்றுக்கொண்டார். அவரால் இயன்ற அனைத்தையும் அவர் செய்தார். இவர் மரித்துப்போவார் என்று ஜனங்கள் நினைத்துக்கொள்ளும் அளவு அதிகமாக உபவாசித்திருக்கிறார்.

இப்ப, இன்னும் அதிகமாக சொன்னால், சபையினுடைய சடங்குகள் எல்லாம் இவருக்கு பெரிய ஆறுதலாக இருந்தது, குறிப்பா அறிக்கை செய்வது. பிரச்சனை என்னன்னா, ஒரே நேரத்தில் 6 மணி நேரம்

அவருடைய பாவத்தை அறிக்கை செய்திடுவார், அறிக்கையை கேட்கும், பாதிரியார், உங்களுக்கு தெரியுல்ல, அவர் ரொம்ப நொந்துபோய் அவர்கிட்ட, “லூதர்! அடுத்த முறை நீ வரனுன்னா, ஏதாவது பெரிய பாவமாக இருக்கட்டும், இந்த அற்பமான காரியங்கள், சின்ன சின்ன பாவங்களுக்கு வராதே என்றார்.” ஆனா ஜான், இப்படிபட்டவர்களை விட லூதர் சிறந்த இறையியலாளராக இருந்தார் ஏன்னா நம்முடைய சந்ததியார் மறந்துபோன விஷயத்தை அவர் புரிந்துகொண்டார். ஒரு பாவம் பெரிதாகவோ சிறியதாகவோ இருப்பது பிரச்சனையே அல்ல. அது சிறிய பாவமாக இருந்தாலும் தேவனிடமிருந்து நம்மை என்றென்றைக்குமாய் பிரித்திடும்.

எனவே, அவருடைய எல்லா பாவத்தை அறிக்கையிட விரும்பினார், ஆனால்  பிரச்சனையில் சிக்கிக்கொண்டார். பாவம், அறிக்கை செய்யப்படுவதற்கு பதிலாக, ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியிருந்தது. அதை அவர் நினைவில் வைக்காவிட்டாலோ ஞாபகப்படுத்தாவிட்டாலோ, அவர் அதை அறிக்கை செய்ய முடியாது, அப்படியானால் மன்னிப்பை பெற முடியாது. இன்னும் சொன்னா, அவர் செய்த காரியங்களில் ஏதாவதொன்று தேவனை பொருத்தவரை பாவமாக இருக்க அதை இவர் உணராமல் இருக்க முடியும். இப்ப இங்க அடுத்த பிரச்சனை உண்டானது. வடிகுழாய கையில் பிடிச்சுக்கிட்டே வீடு துடைப்பது போன்றது, மறுபடியும் தண்ணீ வடியுமே. உங்க எல்லா பாவத்தையும் நீங்க அறிக்கை

செய்திருந்தாலும், நாளைக்கு அறிக்கை செய்ய இதைவிட அதிக பாவங்கள் முன்னால நிற்கும் இப்படி தொடாந்துகிட்டே இருக்கும். அவர் இப்படிபட்ட விஷயத்தால போராடினார் அதற்கு ஜெர்மானியத்தில் அன்பெக்டன்ஜென் - அதாவது ஆத்தமா வாஞ்சிப்பதை அடைய உதவியற்று நிற்கும் நிலை."

மீதமுள்ள கதையையை சொல்லட்டுமா?

**ஆன்கர்பெர்க்:** பிலீஸ்

**லட்சர்:** ஏன்னா இது அதோட நிக்கல, அதற்கு நன்றி. அவர் என்ன செய்தாருன்னா, அவர் விட்டன்பர்க்கில் என்ற சிறிய நகரத்தில் ஆசிரியராக இருந்தார் பாதிரியார் அங்கு வந்து இவரை பார்ப்பார், ஏன்னா லூதர் நன்னெறி மற்றும் சித்தாந்தங்களை போதித்தார். பாதிரியார் அவரிடம் கேட்பார், "நீ ஏன் இறையியல் போதிக்க கூடாது. உன் ஆத்துமாவுக்கு உதவியாயிருக்கும்" ஏன்னா ஒரு சமாதானமில்லாத நிலையை அவர் அனுபவித்துக்கொண்டிருந்தார். அதாவது, அவர் ரோமிற்கு சென்றிருந்தும் அங்கு அவருக்கு சமாதானமில்லை. அதற்கு லூதர் சொன்னர், "நான் வேதாகமத்தை போதிக்க ஆரம்பித்தால், அது நான் மரிப்பதற்கு ஈடாகும் என்றார்." அதன் அர்த்தத்தை அவர் புரிந்துகொள்ளவில்லை, அவர் மரிக்க நேரிடும் என்றார். மேலும் அவர் சங்கீதத்தை போதித்தார். சங்கீதம் 22ற்கு வந்தார், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்?" இப்ப, லூதர் சொன்னார், நான் அனுபவித்துக்கொண்டிருப்பதை

இயேசுவும் அனுபவித்தார், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கும் அந்த உணர்வு. அதின் சத்தியம் உதிக்க தோன்றியது, “அதை எனக்காக செய்;தார்.”

ஆனா மெய்யான சத்தியம் அவருடைய ஆத்துமாவில் ஒலித்தது அவர் ரோமர் புத்தகத்தை போதிக்க துவங்கியபோதுதான் பிரபலமான வசனம் அதிகாரம் 1, வசனம் 16, “சுவிசேஷத்தை பிரசங்கிக்க நான் வெட்கப்படேன்,” என்றார் பவுல். ஆனால் வசனம் 17ல் பவுல் கூறுகிறார், “விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.” கவனிங்க, தேவனால் உண்டாகும் நீதி வெளிப்படுத்தபடுகிறது. லூதர் இதை வாசித்ததுத் அதிர்ந்துபோனார். அவருடைய பிரச்சனை தேவநீதியாக இருந்தது. தேவன் அவ்வளவு நீதிநிறைந்தவராக இல்லாவிட்டால், அவரை அனுகுவது எளிதாக இருந்திருக்கும், சரியா? ஆனா அவர் இந்த வசனத்தை தியானித்தார் அப்போது அதிலுள்ள தொடர்பை அவர் அறிந்து புரிந்துகொண்டார். நீதி என்பது தேவனுடைய பண்பாக இருக்கிறது, ஆனால் அவரை விசுவாசிப்பவர்களுக்கு அவர் அருளும் ஈவாகவும் இருக்கிறது. தேவன் நமக்கு அளிக்கும் நீதி எதுவென்றால் அது அவருடைய நீதிதான் தம்முடைய நீதியை கிறிஸ்துவின் மீது நமக்குள்ள விசுவாசத்தினால் அருளப்பட்டிருக்கிறது.

லூதருடைய சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்படுவதற்கில்லை அவர் மறுபிறப்படைந்ததும் அவர் பரதீசிக்குள் நுழைந்ததை போன்று உணர்நததாக கூறியிருக்கிறார். ஏனென்றால் அவரால் இப்போது தேவன் எதிர்பார்க்கும் அனைத்தையும் கொண்டிருக்க முடியும் ஏன்னா இயேசு அவருக்காக தேவன் எதிர்ப்பார்ப்பவைகளை செய்து முடித்துவிட்டார். மேலும் பரிபூரணமாகும்படி அவர் செய்த சபை சடங்குகள் மற்றும் அனைத்து நற்கிரியைகளும், உண்மையில், அவையனைத்தும், ஒன்றுமில்லாமற்போனது ஏன்னா தேவனுடைய நீதியை ஒருவராலும் அடைய முடியாது, இப்போது அவருக்கு அது ஈவாக வழங்கப்பட்டுள்ளது. மறுமலர்ச்சி;யை ஏற்படுத்தும் யோசனை - வேதாகம யோசனை, ஆனால் முற்றிலும் மறுமலர்ச்சியை உண்டாகச் செய்திடும். ஏனென்றால் லூதர் எதை கவனித்தாரென்றால் நம்மால் முயன்ற அளவிற்கு செய்ய நினைக்கும் நீதியான காரியங்கள், மற்ற விஷயங்களனைத்தும், தேவனுடைய நீதியை அடைய ஒருபோதும் போதாது, அடிதப்படியென்றால் ஆயரக்கணக்கான வாழைப்பழத்தை சேர்த்தாலும் ஆரஞ்சு பழம் வராது, அதோபோல நம்முடைய நீதிகள் தேவனுடைய நீதிக்கு ஏற்றதாக இருக்காது. தேவனுடைய நீதியை நாம் பெறுகிறோமென்றால், அது ஒரு ஈவாகதான் இருக்கும்.

சரி, ஜான், சிறப்பான பகுதி இதுதான், இதை பார்த்துக்கொண்டு கேட்டுக்கொண்டிருப்பவர்கள் இதை புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன் ஏனென்றால் சுவிசேஷத்தின் மையப்பொருள் இதுதான்.

வேம் கூறுகிறது 2 கொரிந்தியர் 5:21ல், “நாம் அவருக்குள் தேவனடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்.” எனவே, நமக்கு என்ன நடந்தது, நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவின் மீது சுமத்தப்பட்டது. தனிப்பட்டவிதத்தில், அவர் பாவமற்றவர், ஆனால் அவர், தேவன் வெறுக்கும் விபச்சாரம் வேசித்தனம் குழந்தைகள் வன்னொடுமை போதை பழக்கம் சுய நீதியாயிருத்தல் போன்ற குற்றங்களை ஏற்றுக்கொண்டார். நம்முடைய பாவம் அவர் மேல் வந்தது. அவருடைய நீதியும் தூண்மையும் நமக்கு வழங்கப்பட்டது. அதனால் அவர் அனுபவிக்க கூடாததை அனுபவித்தார் - குறிப்பாக, நமது பாவம். தகுதியற்ற நாம் அவற்றை பெற்றுக்கொண்டோம் - குறிப்பாக, அவருடைய நீதி.

அதுதான் சுவிசேஷம்: விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல். தேவன் நம்மை பார்த்து - பரலோகமே நம்மை பார்த்து சொல்கிறது - தேவன் நம்மை கிறிஸ்துவின் நீதியை உடையவர்களாக இருக்கிறோம் என்கிறார், ஏனென்றால் தேவனுடைய நீதி பாவிகளுக்கு வழங்கப்பட்டது. பிரமாணத்தின்படி, தேவனுடைய பார்வையில், தேவனைப் போல நாமும் பரிபூரணமாயிருக்கிறோம். அது மட்டுமில்லைன்னா, ஜான், யாரும் இரட்சிப்படைய முடியாது - தேவனுடைய நீதி நமக்கு வழங்கப்படாவிட்டால் இது நடந்திருக்காது. அதுதான் சுவிசேஷத்தின் நற்செய்தியாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** வசனம் என்ன சொல்கிறது என்பதை விளங்கிக்கொண்ட போது லூதர் பெற்றுக்கொண்ட நீதியை எப்படி ஒருவர் அடையமுடியுமென சொல்லுங்க.

**லட்சர்:** முதலாவதாக, இரட்சிக்கப்பட நம்முடைய கிரியைகள் பிரயோஜனமற்றது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நான் ஏற்கனவே சொன்னதுபோல, தேவன் அவருடைய நீதியை மட்டுமே ஏற்றுக்கொள்கிறார் - அந்த நீதியை நம்மால் அடைய முடியாது. நம்முடைய நற்கிரியைகள் எல்லாம் கந்தைகள், "நம்முடைய நீதி அழுக்கான கந்தையாக இருக்கிறது," என்று ஏசாயாவில் சொல்லப்பட்டுள்ளது (64:6) மேலும் புதிய ஏற்ப்பாட்டில், "நாம் எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தவர்களானோம் என்றிருக்கிறது." (ரோமர் 3:23. ஆமாம், ஒருவர் மற்றவரைக் காட்டிலும் அதிக பாவம் செய்திருக்கிறார், அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் எல்லாரும் பாவிகள் தான். அதனால் என்ன நடந்தது, இயேசு நமக்காக வந்தார் அதனால் இப்போது எல்லாவற்றையும் சரி செய்து இருக்கிறார். நான் தேவனுடைய பிள்ளையாகவும் அவரோடு ஐக்கியம் கொண்டிருக்க நான் ஒருநாளின் 24 மணிநேரமும் பூரணமாய் பரிசுத்த இருக்க வேண்டும் என்கிறார். ஒரு நாளின் 24 மணி நேரம், தேவன் எதிர்பார்க்கிறதை இயேசு செய்கிறார். அது அருமையானதல்லவா?

**ஆன்கர்பெர்க்:** மிக அருமையானது.

**லட்சர்:** அதாவது, நான் ஒரு விஷயத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கிறேன், நாம் வாழ்வில் விரும்பும் விஷயங்கள் அதிகம் இருக்கிறது, ஆனால் நா இப்ப சொல்லபோற விஷயத்திற்காக ஏங்குகிறேன். ஏன்னா என் வாழ்வை பாதித்தது, என் வாழ்வை அது மாற்றியது. நீங்களும் அதை அனுபவித்துக்கொண்டிருக்கிறீர்கள் அப்படிதானே, அதாவது, ஒரு மாற்றம். என்னை ஒவ்டிவாரு நாளும் அது பலமூட்டுகிறது, "சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பேன் என்ற உறுதி," ஒரு பாடகர் இதை எழுதியிருக்கிறார். "என் பெயர் அவர் கரத்தில் பொறிக்கப்பட்டுள்ளது." பிரமாணத்தின்படி நான் ஏற்கனவே பரலோகத்தில் இருப்பதாக நினைக்கிறேன் ஏனென்றால் நாம் கிறிஜ்துவுடனே கூட உன்னதங்களில் இருக்கிறோம் என்றிருக்கிறது, நாம் கிறிஸ்துவுடனே கூட உன்னதங்கிளல் உட்கார்ந்திருக்கிறோம், இப்போது இயேசு என்னை பிதாவின் முன் நிறுத்துகிறார். அதனுடைய அர்த்தம் என்னவென்று உங்களுக்கு தெரியுமா? மரணத்தின் போது எல்லைகளில் எந்த போராட்டமும் இருக்காது ஏன்னா, நாம, பிரமாணத்தின்படி பரலோகத்தில் இருக்கிNறும் என்பதுதான். உத்தரிப்பு ஸ்தலம் என்பதை பற்றி லூதர் புரிந்துகொண்ட போது அவர் அளித்த முதல் உபதேசம் இதுதான். ஏனென்றால் பரலோகம் செல்ல தேவையான நீதியோடு ஒருவரும் மரிப்பதில்லை என்பதன் அடிப்படையில் தான் உத்தரிப்பு ஸ்தலத்தை பற்றி கூறுவார்கள்.

லூதர் எதை புரிந்துகொண்டாரென்றால்: இந்த வாழ்வில் தேவனுடைய நீதி எனக்கு வழக்கப்படுகிறதென்றால், இந்த வாழ்விலிருந்து நான் நேரடியாக பரலோகம் செல்ல முடியும் மேலும் கிறிஸ்துவை போல தேவனுடைய பிரசன்னத்தில் நான் பரிபூரணமாயிருப்பேன், ஏனென்றால் இயேசுவினுடைய கிரியையினால் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன், என்னுடைய சுய நீதியினாலல்ல. இதுதான் இயேசு கிறிஸ்துவை குறித்து சுவிசேஷத்தின் நற்செய்தி.

**ஆன்கர்பெர்க்:** இது அருமையான செய்தி அதோடு அருமையான செயல்பாடுகளாகவும் இருக்கிறது. இப்Nபுhது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம் மீண்டும் வரும்போது, அதன் செயல்பாடுகளை குறித்து பேசப்போகிறோம். ஏன் அது அமையானது நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்ற நிச்சயத்தை எப்படி பெறுவது நான் இரட்சிக்கப்பட்டதால் என்றென்றைக்கு பாதுகாப்பாக இருப்பது எப்படி போன்றவற்றிற்கு திரும்பி வந்ததும் பதிலளித்திடுங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட் மீண்டும் வருக, நாம் பேசிக்கொண்டிருப்பது டாக்டர். எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் போதகர் சிக்காகோ. விசுவாசத்தினால் உண்டாகும் நீதியை குறித்து பார்க்கின்றோம். வசனங்களில் லூதர் கண்டறிந்த காரியங்களை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம் இன்றைக்கு அது நமக்கு ஏற்றதான இருக்கிறது. எர்வின், நீங்கள் சொல்லிக்கொண்டிருந்த காரியங்கள்

சம்பந்தமான சில கேள்விகளை வைத்திருக்கிறேன், முதலாவதாக, சிலர் சொல்கிற விஷயம், “சரி, ஒருவேளை நீங்கள் சொல்கிறபடி நான் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தவுடன் அவருடைய செய்கையால், பிரமாணத்தின்படி அவருடைய நீதி எனக்கு அளிக்கப்படுகிறது, அப்படியானால் நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாலும் பிசாசின் வழியில் வாழலாம் என்று அர்த்தமாகுமா?

**லட்சர்:** அதாவது, அந்த கேள்வி மக்களிடமிருந்து வருவதை நான் நேசிக்கிறேன், ஏன் என்று உங்களுக்கு சொல்கிறேன். முதலாவதாக, இந்த கேள்வியை கேட்கிறவர்களில் யாராக இருப்பார்கள் என்றால் இதுவரை சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பார்கள். உங்களுக்கு தெரியுமா, காரணம் என்னன்னா இதனால் உண்டாகும் செயல்களை அவர்கள் அறியவில்லை. அதாவது, அப்போதலனாகிய பவுல் ரோமரில் சுவிசேஷத்தை விளக்கி சொல்கிறார், அவருக்கு தெரியும் அவிசுவாசி, அவர் எழுதியதை வாசிக்கும்போது, இதை முடிவு செய்கிறான். அதனால் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார், “நாம், கிருபை பெறுகும்படி பாவத்திலேயே இருந்து விடலாமா,” (ரோமர் 6:1). ஆப்Nபுhஸ்தலனாகிய பவுல் சொன்னது நினைவிருக்கிறதா ஏன்னா யாரொருவன், சுவிசேஷத்தை கேட்கும்போது, யோசிப்பதுண்டு, “இதிலென்ன இருக்கு! இயேசுவை நான் விசுவாசிக்கிறேன். ஆனா பிசாசை போல வாழ்ந்திட்டுபோறே. இரண்டு உலகத்தை நான் அனுபவிக்கலாமே.” இதில் என்ன நடக்கிறது என்பதை புரிந்துகொள்ளும்

பகுதி காணப்படுவதில்லை. நாம் வெறுமனே பரலோகத்தில் தேவனுடைய நீதி என்று சொல்லப்படவில்லை, அதுதான் நியாயந்தீர்க்கப்படுகிறது. அதே சமயத்தில் - அதாவது நம்முடைய அடுத்த நிகழ்ச்சி முற்றிலும் இந்த தலைப்பை கொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன் - சரி அதே சமயத்தில், நாம் ஆவியில் மறுபிறப்படைகிறோம், அதனுடைய அர்த்தம் தேவன் நமக்கு புதிய எண்ணத்தையும் விருப்பத்தையும், புதிய புதிய தாக்கத்தையும், அவரை சேவிக்கும்படியான விருப்பத்தையும், தர நாம் வித்தியாசமானவர்களாக மாறுகிறோம். “ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். புழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின.” (2 கொரி. 5:17). எனவே, இதை கவனிங்க. ஒருவேளை நாம், தேவனுடைய பிள்ளைகளாக, இருந்தும் உலகத்தோடு இணைந்து மறுபடியும் பழைய பாவங்களுக்கு திரும்பலாமென்று நினைத்தால், தேவன் நம் இருதயத்தில் இடைபடுவார்;. ஆப்படி செய்ய நம்மை அனுமதிக்க மாட்டார் ஏனென்றால் கடந்த காலத்தின் பாவத்தை விலக்கிவிட்டு நாம புதிய வாழ்க்கை வாழ வேண்டுமென்பது அவரது விருப்பம்.

**ஆன்கர்பெர்க்:** இப்ப மறுபக்கம். ஒரு மனிதன் நினைக்கிறான், “சரி, நான் தேவனுக்கு ஒரு சத்தியம் செய்யனும். என்னால முடிந்தளவு அவருக்கு ஊழியம் செய்திடுவேன்.” அதில் ஆர்வமாக இருக்காங்க. உண்மையில் சுவிசேஷத்தை முழுமையாக புரிந்துகொள்ளவேயில்லை.

ஜனங்கள் இதை ஒரு அழைப்பாக பயன்படுத்திக்கொள்கிறார்கள்: "நீங்கள் முன்பாக வர விரும்பினால், நீங்கள் என்றென்றைக்கு கிறிஸ்துவை சேவிப்பீர்கள் என்று நான் உறுதியாக சொல்கிறேன்." அப்ப இவனுக்குள் தோன்றுவது, "சரி, நான் உண்மையாயிருந்து, அப்படி செய்வேன், ஆனா இது, நாளைக்கு என்ன நடக்குன்னு தெரியாது, "எப்படி ஒருவர் இந்த இரட்சிப்பில் பாதுகாப்பாக இருக்க முடியுன்னு சொல்லுங்க?

**லட்சர்:** இது ஒரு சிறப்பான கேள்வி. ஒரு சுவிசேஷகர் ஒருமுறை சொன்னது நினைவிருக்கிறது, "நீங்க ஏன் முன்பாக வந்து கிறிஸ்துவை பின்பற்றுவதான வாக்கு கொடுக்க கூடாது என்றார்." குpறிஸ்துவை பின்பற்றுவேன் என்று வாக்குறிதி! நீங்களும் நானும், ஜான், பல வருடங்களாக இயேசுவை அறிந்திருந்தும் அவரை பின்பற்றுவதில் போராடுகிறோம். கற்பனை செய்து பாருங்கள் ஒருவர் வந்து சொல்கிறார், "ஓ, நான் இயேசுவை பின்பற்றப்போகிறேன்." அது சுவிசேஷம் கிடையாது. நீங்க இயேசு கிறிஸ்துவிடம் வரும்போது, அவரை பின்பற்றுவேன் என்று சத்தியம் செய்ய வர வேண்டிய அவசியம் கிடையாது. ஏதோவொன்றை பெற்றுக்கொள்ள வருகிறீர்கள். ஒரு பாமாலையில் இருக்கிறது, "என் கையில் ஒன்று கொண்டுவரவில்லை, சிலுவை பற்றிக்கொள்ள வந்தேன்."

எனவே, மெய்யான இரட்சிப்பு என்பது தேவனுக்கு வாக்குறிதி அளிக்கும் என்னுடைய எல்லா எண்ணங்களையும் விட்டுவிடுகிறேன்

எ,பி,சி,டி இல்ல. அதற்கு அர்த்தம் நான் என் எல்லா தேவைகளோடு தேவனிடம் வருகிறேன், என் பாவங்களோடு வருகிறேன், அவர் மாறாதவர். ஆனால் என்னுடைய விசுவாசத்தை என்னை இரட்சித்து எனக்கு நீதியை வழங்கு தேவனக்கு முன்பாக நிற்கச்செய்ய வல்லரை நோக்கி வருகிறேன் பரிசுத்ததேவனுடைய பிரசன்னத்தில் நிற்க விரும்புங்கள். இப்படிபட்ட எளிமையான விசுவாசம், நம்பிக்கையை மாற்றியமைத்தல் - சபை சடங்குகள் மீது இல்லாமல் கிறிஸ்துவின் மீது, நற்கிரியைகள் அல்ல கிறிஸ்துவே. மற்றவையல்ல கிறிஸ்து. இயேசு கிறிஸ்துவையும் சுவிசேஷத்தின் சத்தியத்தையும் சிலுவையில் நமக்காக அவர் செய்ததையும் காண்பது அருமையான ஒன்றாக இருக்கும். நம்முடைய இருதயத்தில் மேலான விசுவாசம் எழும்பிடும், இயேசு கிறிஸ்து விலைகிரையம் செலுத்திவிட்டார் என்பதை அறிந்து ஒரு நம்பிக்கை உண்டாகும்.

எப்Nபுhதும் சொல்லுவேன், அதை மறுபடியும் சொல்கிறேன் மறுபடியும் அதை சொல்லுவேன் ஏன்னா நாம இதைக்குறித்து தான் பேசப்போகிறோம் நம்பிக்கை மற்றும் சந்தேகம், ஆனா இதை மட்டும் சொல்ற. இயேசு சிலுவையில் மரித்த போது தேவனுடைய பிரசன்னத்தில் நீங்க நிற்பதற்கு வேண்டிய அனைத்தையும் செய்துவிட்டார் என்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால், உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள், இரட்சிக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்ளுங்கள். ஏனப்படி? ஏன்னா அது உங்கால் உண்டானதல்ல,

அதற்கு காரணம் 100 சதவிகிதம் இயேசு தான். சரி, ஜான், ஒருவேளை என்னுடைய எண்ணம் இரட்சிப்பிற்கு 95 தேவன் 5 சதவீதம் என்னுடைய பங்கு என்றால், எனக்கு எப்படி அது உறுதியாகும், என்னுடைய 5 சதவீதத்தை என்னால நம்ப முடியாதே. இயேசு எல்லாவற்றையும் செய்து முடித்து சொல்கிறார், “எல்லாம் முடிந்தது” அதை பார்க்கும்போது அவரை விசுவாசித்து அவரை நம்புகிறவர்களுக்காக அவர் செய்ததை கண்டு ஆச்சரியமடைகிறேன், நான் அவருக்குள் இருந்தால் தேவனுடைய பிரசன்னத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறேன். அதுதான் சுவிசேஷத்தின் சாரமாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இப்ப கிருபை குறித்து கேட்கிறேன். இப்போது நீங்கள், இதை கேட்டுக்கொண்டிருப்பவர்கள், இரட்சிக்கப்படுவதற்கு முன்பு, இரட்சிக்கப்பட உங்களுடைய நற்கிரியைகளையும் இதில் சேர்க்க முயற்சித்திருப்பீர்கள். ஆனா ஒருவர் இப்படியாக சொல்கிறார், “இல்ல, இது முற்றிலும் தேவனடைய ஈவு அதில் இருக்கிறேன், நாளைக்கு எப்படின்னு தெரியாது. நூன் கிறிஸ்துவை உண்மையாக விசுவாசித்திருந்து நாளைக்கு பாவம் செய்தால், அதற்காக நான் ஏதாவது செய்ய வேண்டுமா? முன்னதாக? பிற்பாடு, என்னுடைய கிரியைகள் எப்படி வருகிறது? நான் எப்படி எப்பவும் பாதுகாப்பாக இருக்கேன்னு சொல்லுங்க?

**லட்சர்:** முதலாவதாக,  ஒன்று சொல்கிறேன், ஓகே, இன்றைக்கு இயேசுவ ஏற்றுக்கொண்டு நாளைக்கு பாவம் செய்றீங். ஒருவேளை, இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருந்தும் சாயங்காலமே பாவம் செய்யலாம், ஏன்னா எல்லாருமே பாவம் செய்வோம். நாம பாவம், செய்வோம், ஓகே, சிந்தனையில, வார்த்தையில, செயல்லளையும் இருக்கு. எளிமையான விஷயம், உங்க பாவங்கள அறிக்கை செய்வது, அந்த அறிக்கைகள் செய்ய ஒரு ஐக்கியம் உங்களுக்கு வேண்டும். ஆதனால, இந்த ஒரு நல்ல விஷயம், ஜான். லூதர் சுமார் 6 மணி நேரம் தன்னுடைய பாவங்கள அறிக்கை செய்த எர்பூர்ட் மடத்துல இருந்தப்ப இரட்சிக்கப்படல. இன்றைக்கு தினமும் சபையில பாவ அறிக்கை செய்கிற இரட்சிக்கப்படாத அநேகர் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை உங்கள் பாவங்களை ஏற்றவராக ஏற்றுக்கொண்டால் இரட்சிக்கப்படுவீர்கள், தேவனோடு உங்களை  ஒப்புரவாகச் செய்கிற ஒருவர் என்று நம்புங்கள். ஆனா இரட்சிக்கப்பட்டிருந்தும், நமது பாவங்களை அறிக்கை செய்கிறோம். இன்றைக்கு காலையில என் பாவங்களை அறிக்கை செய்தேன். அதுதான் கிறிஸ்த வாழ்வின் ஒரு பாகமாக இருக்கிறது. அறிக்கையிடுதல் என்றால் தேவனோடு ஒத்துப்போகுதல், நாம் பாவம் செய்திருப்பதை தேவனிடத்தில் ஒத்துக்கொள்வது. அவரால் நம்முடைய வாழ்வில் இருக்கும் பாவத்தில் எடுத்துப்போடும் அதிகாரம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளுதல் எனவே அதனால், சிறுவனாக என்னுடைய

பெற்றோருடன் ஒப்புரவாகும்படி நான் அறிக்கைசெய்தது போல, கிறிஸ்தவர்களாகிய நாமும் இதோ விதத்தில் ஒப்புரவாக வேண்டும். ஆனால் இதற்கு மறுபடியும் இரட்சிக்கப்பட வேண்டியதில்லை. நான் கீழ்ப்படியாமல் இருந்தாலும் என் தகப்பனுக்கு பிள்ளைதான், இருந்தாலும் எங்களுடைய உறவை வலுப்படுத்திட என்னுடைய பாவங்களை அறிக்கை செய்து ஒப்புரவாக வேண்டும்.

சரி, உறுதி எப்படி வருகிறதென்றால் நான் இயேசு கிறிஸ்துவின் செயலை புரிந்துகொள்ள, வேண்டும் - இப்போது தேவைபட்டால் எபிரேயர் 10ஐ பார்க்கலாம் - அதில் சொல்லப்படுகிறது இயேசு பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். (எபி.10:14) லூதருக்கு தேவைப்பட்டதெல்லாம் அவருடைய பாவங்களை அவரைவிட்டு அகற்ற ஒரு செயல், தேவனோடு ஒப்புரவாகிட, அவர் செய்ய வேண்டியிருந்ததை - அவர் நிச்சயமாக செய்தார் - ஐக்கியத்தை நிலைபடுத்த தொடர்ந்து தனது பாவத்தை அறிக்கை செய்தார். ஆனால் மறுபடியும் அவர் இரட்சிக்கப்படவேண்டிய அவசியமில்லை. ஏன்னா அப்படிபட்ட இறையியல் இருந்தா, ஒருவரும் இரட்சிப்பின் நிச்சயத்தை பெற முடியாது.

எனவே அதனால, நான் முன்பு சொன்னதுபோல, நாம கீழ்ப்படியாமல் இருந்தா தேவன் சிட்சிப்பார், ஆனா நமக்குள்ள ஆழமான ஒரு நிச்சயம் இருக்கிறது - இதை இன்னும் விளக்கமாக நாம் பார்க்க இருக்கிறோம்

ஏனென்றால் இன்னும் சில யோசனைகள் நினைவிற்கு வருகிறது அதை இப்போது நாம் பார்க்கப்போவது கிடையாது - ஆனா நமக்குள்ள அந்த ஆழமான நிச்சயம் இருக்கிறது மேலும் நாம் தேவனடைய பிள்ளைகள் என்றும் என்றென்றைக்கும் அவருடைய பிள்ளைகளாக இருப்போம் என்றும் அறிந்திருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** இப்போது கிருபையை குறித்து அடுத படிக்கு செல்லலாம் ஏன்னா ஒருவேளை ஒருசிலர் கேட்கலாம், ஆனா எர்வின், என்ன உங்களுக்கு தெரியாது. நான் மகாபாவி. ஏந்த பாவத்தை சொன்னாலும், நான் அத செய்திருக்கே. நீங்க சொல்றது நல்லது போலதா இருகக்pறது என்றிடலாம்." இது எவ்வளவு உண்மையாது? விளக்கி சொல்லுங்க.

**லட்சர்:** வேதத்தை அறிந்துகொள்வது வியப்பானதல்லவா பழைய ஏற்ப்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது, "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்று இருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்." (ஏசா.1:18). ஒருவேளை இயேசு கிறிஸ்துவினுடைய நீதி பனியை போல வெண்மையானது என்றால், இந்த உதாரணத்தின்படி, நல்ல விஷயங்களை மூடுவதுப் போலவே அசுத்தமானதையும் அந்த பனி மூடிக்கொள்ளும், இன்றைக்கு கேட்பவர்கள் யாராக இருந்தாலும், குற்றங்களை செய்த சிறைகைதியாக இருக்கலாம், கற்பழிப்பாளன்,திருடர், கொலைகாரர், இன்றைக்கு யாராக இருந்தாலும்

சரி, நம்மை போல இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது நீதியென்னும் ஈவை அவர்களும் பெற்றுக்கொள்கிறார்கள், ஜான், நம்மை போல கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்தவர்களாக இருந்தாலும் இதை பெற முடியும். மேலும் உண்மையில், குற்றங்கள் பாவங்களிலிருந்து மீண்டிருக்கிறோம். ஆனால் எளிதான உண்மை இதுதான், நம் எல்லாருக்கும் தேவனுடைய நீதி அவசியம் அவை வெறுக்கத்தக்க பாவிகளுக்கு கொடுக்கப்படுகிறது. உங்களுக்கு அந்த பாடல் தெரியுமா, அது உண்மையை சொல்கிறது: “வெறுக்கத்தக்க பாவிகள் விசுவாசத்த மாத்திரத்தில் தேவனிடத்திலிருந்து மன்னிப்பை பெறுகிறார்கள்.” இயேசுவினால் உண்டாவைஇ அதுதான் சுவிசேஷத்தின் அற்புதம்.

**ஆன்கர்பெர்க்:** இன்றைக்கு கிறிஸ்துவை விசுவாசிக்க விரும்புகிறவர்களுக்கு சொல்கிறேன், அடுத்த வார நிகழ்ச்சி வரை காத்திருக்க வேண்டாம், அவர்கள் தங்களுடைய நம்பிக்கையை இயேசுவின் மீது வைக்கும் அவர்கள் நீங்கள் ஜெபத்தில் நடத்தி உதவிடுவீர்களா?

**லட்சர்:** சரி. பிதாவே, சுவிசேஷத்தின் அற்புதத்திற்காக இன்றைக்கு உமக்கு நன்றி செலுத்துகிறோம். இது நல்லவர்களுக்கும் நம்பிக்கையை அளிக்கிறது தீயவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கிறது அதற்காக உமக்கு நன்றி. இரண்டு குழுவிற்கும் நீர் ஒரே திட்டத்தை வைத்திருப்பதற்காக நன்றி, ஏனென்றால் எல்லாரும் பாவம் செய்து

தேவ மகிமையை இழந்துபோனோம். (ரோ.3:23) இதை கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்காக ஜெபிக்கிறேன், முதல் முறையாக தாங்கள் இரட்சிக்கப்படக் கூடும் என்பதை புரிந்துகொண்டவர்களுக்காக உமக்கு நன்றி இயேசுவே.

எனக்கு அன்பானவர்களே, இப்போது இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்: தேவனே, நான் பாவியென அறிவேன். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் அவசியத்தை அறிவேன். இந்த நேரத்தில், இயேசு என் பாவத்தை ஏற்றதை நம்புகிறேன். அவருடைய நீதியை என்னுடையாக ஏற்றுக்கொள்கிறேன். இந்த விலையேறப்பெற்ற ஈவிற்காக உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில். ஆமென்.

**ஆன்கர்பெர்க்:** அடுத்த வாரம் இதை பற்றி அதிகமாக பேசப்போகிறோம். எர்வின், நம் அனைவருக்கும் தேவைப்படும் அற்புதத்தைக் குறித்து பேசப் போகிறோம். அது ஒரு புதையல், எதைப் பற்றி நாம் பேச இருக்கிறோம்?

**லட்சர்:** நாம் மறுபிறப்படைதல் என்பதை பற்றி பார்த்திடுவோம். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுக்கு அது எப்படி வேறுபட்டிருக்கிறது? இன்றைக்கு நம்முடைய சமுதாயத்தில் பலருடைய கருத்து என்னவென்றால், "அதாவது, அவ மறுபிறப்படைந்தவன்", உண்மையில் வேதம் மறுபிறப்படைந்த கிறிஸ்தவர்களை பற்றி என்ன போதிக்கிறது?

**ஆன்கர்பெர்க்:** அருமையான விஷயம், நண்பர்களே.

இணைந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.